(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 398.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 21, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2691/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற மனித வள மற்றும் பௌதீக வள பற்றாக்குறைகள் யாவையென்பதையும்;

(ii) இப்பற்றாக்குறைகளையும் குறைபாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மொத்த மாணவர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தில் உள்ள பீடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டுக்காக மேற்படி பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகையானது, 2011 ஆம் ஆண்டுக்காக இதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட பணத் தொகைக்கு ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ள அல்லது குறைவடைந்துள்ள அளவு எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3270/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்று உள்ளவாறு நாட்டில் உள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையையும்;

(ii) 2011, 2012 ஆகிய வருடங்களில் டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையையும்;

(iii) அத்தகைய உதவிக்கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கருத்திற்கொள்ளப்பட்ட மூலப் பிரமாணங்களையும்;

(iv) 2010, 2011, 2012 ஆகிய வருடங்களில் மாதாந்தம் மற்றும் வருடாந்தம் பெற்றுக்கொண்ட உதவித் தொகைகளின் அடிப்படையில் சமுர்த்தி கிடைக்கப்பெறும் குடும்பங்களின் விபரங்களையும் வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) விலைக்கு வாங்கும் ஆற்றல் அல்லது கொள்வனவு செய்யும் ஆற்றல் அல்லது பணவீக்கம் சார் போக்குகள் தொடர்பாக சமுர்த்தி பெறுநர்களுக்கு நிதியங்களின் மீள் ஒதுக்கீடொன்று உள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3958/ '13

3.

கௌரவ புத்திக பதிரண,— வன சீவராசிகள், வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் யானை – மனித மோதல் காரணமாக வருடாந்தம் பெருமளவு மனித உயிர்கள் இழக்கப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவ்வாறு இழக்கப்பட்டுள்ள மனித உயிர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் யானை - மனிதன் மோதல்கள் காரணமாக அழிவடைந்துள்ள மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்காக செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாத்தறை மிதிகம அரச வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற மருத்துவர் சரத் விமலசூரிய யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக மின்சார வேலியொன்றை உருவாக்கியுள்ளார் என்பதையும்;

(ii) இந்த உபகரணத்தை பரிசோதனை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக வனசீவராசிகள் அலுவலர்கள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) அது இன்றுவரை திருப்பிக் கிடைக்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மருத்துவர் சரத் விமலசூரிய குறைந்த செலவில் உருவாக்கியுள்ள மின்சார வேலியை பரிசோதனை செய்து அதனை யானை – மனித மோதலுக்கான தீர்வொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4296/ '13

4.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை பிரதேச மக்களுக்கு குடிநீரை வழங்குகின்ற நீர் மூலங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நீர் மூலங்களிலிருந்து நீரை வழங்குகின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(iii) 2013 ஜூன் மாதம் முதல் திருகோணமலை பிரதேச மக்கள் எதிர்நோக்கிய குடிநீர் பற்றாக்குறைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி குடிநீர்ப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) திருகோணமலை பிரதேசத்தில் காணப்படுகின்ற குடிநீர் பற்றாக்குறைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக மேலதிக நீர் வழங்கல் மூலமொன்று பயன்படுத்தப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4443/ '13

5.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 'தயட்ட கிருள' 2014 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக குருநாகல் மாவட்டத்தினுள் இனங்காணப்பட்ட வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் வழங்க உத்தேசிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் யாது என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2014 'தயட்ட கிருள' கண்காட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4464/ '13

6.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் ஆட்பதிவுத் திணைக்களத்தில் அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 11 பாதுகாப்பு அட்டைகளும் 02 மல்டி மீடியா கருவிகளும் காணாமற்போயுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது தொடர்பாக திணைக்கள மட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் இனங்காணப் பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) இந்நபர்களால் ஏற்பட்டுள்ள நட்டம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கறுவாத்தோட்டம் பொலீசாரினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் மூலம் உரிய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அல்லது குற்றவாளிகள் இனங்காணப்பட்டு உள்ளனரா என்பதையும்;

(ii) தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புடையதொரு நிறுவனத்தில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான அரசின் நிலைப்பாடு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

4640/ '13

7.

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி கம்பனிகளில் பாரியளவில் விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்கின்ற நிறுவனங்கள் யாவை;

(iii) தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்தல் தடைசெய்யப்பட்டுள்ள விவசாய இரசாயனனப் பொருட்கள் வகைகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ(i) இல் குறிப்பிட்ட கம்பனிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள திகதிகள்;

(ii) தடைசெய்யப்படும்வரை மேற்படி விவசாய இரசாயனப் பொருட்களை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள்;

(iii) தடைசெய்யப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ததன் காரணமாக கரைநிரல் படுத்தப்பட்டுள்ள (Black list) நிறுவனங்களின் பெயர்கள்

என்பவற்றை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கரைநிரல்படுத்தலுக்கு உள்ளாகிய நிறுவனங்களின் பணிப்பாளர்கள் வேறு பெயர்களில் நிறுவனங்களை பதிவுசெய்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4761/ '14

8\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,—கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் 2012 ஆம் ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) சுய தொழிலாக சிறிய அளவிலான கோழிப்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கானதொரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4796/ '14

9\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2013ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சினால் இத்தாலியில் ஹோட்டல் துறையில் தொழில் வாய்ப்புக்களுக்காக இலங்கையர்கள் அனுப்பப்பட்டார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அனுப்பப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) மேற்படி குழுவினரைத் தேர்ந்தெடுப்பதற்காக பத்திரிகை விளம்பரங்கள் அல்லது வேறு பிரச்சார வழிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில் அவை யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4798/ '14

10.

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் அது செயலிழந்த தடவைகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயலிழந்து காணப்பட்ட காலகட்டம் வெவ்வேறாக யாது;

(ii) இதுவரை அது செயலிழந்து காணப்பட்ட சந்தர்ப்பங்களில் அதனை திருத்துவதற்காக செலவான மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி திருத்தத்திற்காக செலவான பணத் தொகை மின் உற்பத்தி நிலையம் செயலிழந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி செயலிழப்பானது ஏற்புடைய உபகரணங்களின் உத்தரவாத காலத்தினுள் இடம்பெற்றிருப்பின் மேலே குறிப்பிட்டவாறு பணம் செலவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட செயலிழப்பு காரணமாக மேற்படி காலகட்டங்களினுள் வேறு மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து தேசிய மின்சார முறைமைக்கு மின்சாரத்தை பெறுவதற்காக செலவிடப்பட்ட மேலதிகப் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழப்பு காரணமாக செலவான மேலதிகப் பணத் தொகையை கூட்டுகின்றபோது ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4941/ '14

11.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து வருடா வருடம் ஒவ்வொரு உயர் கல்வி நிறுவன ரீதியாகவும் மஹபொல புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) 1981 முதல் இதுவரையில் மஹபொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு பங்களிப்புத் தொகைகள் கிடைக்கப்பெறும் வழிவகைகள் யாவை;

(ii) மஹபொல புலமைப் பரிசில் வழங்குவதற்காக குறைந்த வருமானம் பெறும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்தல் திருப்தியடையக்கூடிய உரிய முறையியலொன்றுக்கு அமைய நடைபெறுகின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி முறையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) உயர் கல்வியை பூர்த்தி செய்த மஹபொல புலமைப்பரிசில் பயனாளிகள் இதிலிருந்து பெற்றுக்கொள்ளும் பயன்கள் தொடர்பில் பின்னாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5027/ '14

12.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது உள்நாட்டுச் சந்தையில் சந்தைப்படுத்தப்படும் தெம்பூட்டும் பானங்கள் (Energy Drinks) வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பானங்களிடையே காணப்படுகின்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பானங்கள் வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தெம்பூட்டும் பானங்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினைத் தீர்மானிக்கும் பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டினுள் தெம்பூட்டும் பானங்கள் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5072/ '14

13.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் விசேட கருத்திட்ட நடவடிக்கை பணிப்பாளர் என்ற பதவியொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பதவிக்குரிய கடமைப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) தொல்பொருளியல் திணைக்களத்தில் மேற்படி பதவி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டும் திகதியும் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது தொல்பொருளியல் திணைக்களத்தில் விசேட கருத்திட்ட நடவடிக்கை பணிப்பாளராக பணியாற்றுகின்ற நபரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவியை வகிப்பதற்கு மேற்படி நபர் கொண்டுள்ள கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பதவிக்கு இராணுவ அலுவலரொருவர் நியமிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5199/ ’14

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘பிம் சவிய’ நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(ii) நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றுக்கு முரணான வகையில் ‘பிம் சவிய’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணிகளை அளவை செய்வதற்கு இயலுமாயுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி காணி அளவையானது எந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளபட்டதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில், வழக்கு எண் 2061 என்ற பிரிவிடல் வழக்கின் தீர்ப்பிற்கு இணங்க 3 பகுதிகளாக பிரிக்கப்பட்ட காணியொன்றை மேற்படி தீர்ப்பிற்கு முரணாக ‘பிம் சவிய’ உத்தியோகத்தர்கள் 2 பகுதிகளாக பிரித்துள்ளனரென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி காணியை இவ்வாறு பிரித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5259/ ’14

15.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெல்தொட்ட – பல்லேகம பிரதான வீதி நீண்டகாலமாக கடுமையாக சிதைவடைந்துள்ளதால் இவ்வீதியை பயன்படுத்துகின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) மழை காலத்தில் மேற்படி வீதியை பயன்படுத்துகின்ற பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தெல்தொட்ட மற்றும் பல்லேகம பிரதேசத்தில் வாழும் மக்களின் நலனுக்காக மேற்படி பிரதான வீதியை மிகத் துரிதமாக மறுசீரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.2),— 2014 ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை, 27 ஆம் திகதி திங்கட்கிழமை, 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 29 ஆம் திகதி புதன்கிழமை, 30 ஆம் திகதி வியாழக்கிழமை, 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மற்றும் நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1) ,— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2014 ஒற்றோபர் மாதம் 25ஆம் திகதி முதல் ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி வரை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம், (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2) ,— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2014 நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி சனிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணிவரையும் மற்றும் பி.ப 1.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2014, ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி, வியாழக்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

டிஎவ்சீசீ வங்கி (நீக்கல் மற்றும் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பாராளுமன்ற சபை முதல்வர்,— 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம், 17 தினங்களாக அமைவதாலும்,

வரவு செலவுத் திட்ட குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக நாளொன்றுக்கு சுமார் 8 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, ஒரே தினத்தில் பல்வேறு அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாட நேர்ந்துள்ளதால், அதற்கிணங்க ஒரு செலவுத் தலைப்பிற்காக சுமார் 2 மணித்தியாலங்களே ஒதுக்கப்பட்டுள்ளமையாலும், அதற்கிணங்க ஒவ்வொரு அமைச்சிலும் செலவுத் தலைப்புக்களை கலந்துரையாடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வரையறுக்கப்பட்டுள்ளமையாலும்,

பாராளுமன்றத்தின் அரசாங்க கட்சியின் முதற்கோலாசான் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரின் இணக்கத்தின் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்ட இணைப்பில் குறிப்பிடப்பட்ட 22 அமைச்சுக்களினதும் விசேட அலுவல்களுக்கான செயலகத்தினதும் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

   (ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அக்குழுவானது அரசாங்கக்கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருபத்தியொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3. அக்குழுவானது

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்,

   (ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும் யாரேனும் நபரைப் பாராளுமன்றத்திற்கு அல்லது அக்குழுவின் முன் சமுகமளிக்குமாறு உத்தரவிடுவதற்கும் அதிகாரம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

4. மேற்படி தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்களின் குழுநிலை ஆய்வு ஆரம்பிக்கும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அக்குழு அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## இணைப்பு

1. விசேட அலுவல்களுக்கான செயலகம்

    i. நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர்
    ii. மனிதவள அமைச்சர்
    iii. கிராமிய அலுவல்கள் அமைச்சர்
    iv. உணவு பாதுகாப்பு அமைச்சர்
    v. நகர அலுவல்கள் அமைச்சர்
    vi. சமூக நலன்புரி அமைச்சர்
    vii. நுகர்வோர் நலன்புரி அமைச்சர்
    viii. தேசிய வள அமைச்சர்
    ix. விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்
    x. சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர்

2. பௌத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு
3. தபால் சேவைகள் அமைச்சு
4. தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
5. மீள்குடியேற்ற அமைச்சு
6. சமூக சேவைகள் அமைச்சு
7. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
8. அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு
9. தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
10. மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு
11. அராசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு
12. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு
13. தேசிய மரபுரிமைகள் அமைச்சு
14. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
15. தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
16. சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு
17. தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு
18. தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு
19. கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு
20. வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு
21. சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு
22. தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
23 விசேட கருத்திட்டங்களுக்கான அமைச்சு

* 3.

இலங்கை அணுசக்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 மார்ச்சு 14 ஆம் திகதிய 1853/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 மே 21 ஆம் திகதிய 1863/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 09 ஆம் திகதிய 1870/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 15 ஆம் திகதிய 1871/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 17 ஆம் திகதிய 1871/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.6),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூலை 25 ஆம் திகதிய 1872/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 12.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 26.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 27.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 28.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 29.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 30.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 31.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 32.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 33.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 34.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

35.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

37.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

38.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

39.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---